# எ ம் ஜி.ஆர் பாடல்களில் சமுதாயச் சிந்தனைகள்

**தே.அனித்தா மேரி**
**உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை**
**புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி**
**திருச்சிராப்பள்ளி -2**

**15**

**ஆய்வுச்சுருக்கம்**

கலை உலகின் காவலன். ஏழை மக்களின் பங்காளன். தமிழகத்தைப் நல்லாட்சி புரிந்தவர். நடிகர் தயாரிப்பாளர் இயக்குனர் எழுத்தாளர் அரசியல்வாதி என்று பன்முகத்தன்மை உடையவர். பாரத விருது அண்ணா விருது பாரதரத்னா விருது சிறப்பு முனைவர் பட்டம் வெள்ளி யானை விருது என பல விருதுகளையும் புரட்சி நடிகர் இதயக்கனி மக்கள் நடிகர் என பல பட்டங்களைப் பெற்றவர் திரைப்படங்கள வாயிலாக மக்கள் மனத்தில் நீங்கா இடம் பிடித்தற்கு சொற்களும் கருத்தமைவுகளும் முக்கிய காரணம் .அவை சமுதாயத்தில் பல மாற்றங்களை கொண்டு வந்துள்ளது. ஏற்றத்தாழ்வுகளையும் நீக்கியுள்ளது. இன்றைய தலைமுறையினரும் ஏற்கும் வண்ணம் கருத்துக்களை உடையதாக விளங்குகிறது.

**திறவுச்சொற்கள்:** 1.மடமை – முட்டாள்தனம், 2. தாயகம் - பிறந்த நாடு, 3. குழல் – கருங்கூந்தல், 4.தர்மம் - கொடை

**முன்னுரை**

திரைத்துறையில் சிறுச்சிறு கதாபாத்திரத்ததில் அறிமுகமாகி மிகப்பெரும் நடிகர்களாக உருவெத்தவர்களுள் ஒருவர் எம்.ஜி.ஆர். அண்ணாவின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு சமுதாயத்தை மாற்ற முற்பட்ட சிறந்த தலைவர். படங்களாலும் பாடல்களாலும் மக்கள் மனதில் நீங்க இடம் பிடித்தவர். ஏழை மக்களின் உரிமைக்காக திரைப்படத்திலும் நிஜ வாழ்விலும் போராடியவர். “பழத்திலே பழுத்த கனி தங்கள் மடியிலே விழாதா? ஏன்று பலர் ஆவலாக காத்திருந்தனர்.நல்ல வேளையது எனது மடியிலேயே வந்து விழுந்தது.அதை எடுத்து எனது இதயத்திலே வைத்துக் கொண்டேன”; என்று எம்.ஜி.ஆரைப் பாராட்டி அறிஞர் அண்ணா கூறினார்.

அறிஞர் அண்ணா வழியில் நடந்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை உருவாக்கியவர். திரைப்படங்களில் கதாநாயகனாக வருவது மட்டுமின்றி பலரது வாழ்விலும் கதாநாயகனாக வாழ்ந்து கொண்டிருப்பவர். அவரது பாடல்கள் வழி மக்களுக்கு கூறிய சமுதாய கருத்துகளைக் குறித்துக் கட்டுரையில் காண்போம்.

**அரசியல் வாழ்க்கை**

மருதூர் கோபாலமேனன் இலங்கையில் கண்டிக்கு அருகே உள்ள நாவல்பட்டி என்ற இடத்தில் கோபாலமேனன் சத்தியபாமா ஆகியோருக்கு ஐந்தாவது மகனாக பிறந்தார் தந்தை இறப்பிற்கு பிறகு சில காரணங்களால் கும்பகோணத்தில் குடியேறினார். படிப்பை தொடர முடியாமல் நாடகத்தில் நடித்தார். 1936-ல் தமிழ் சினிமாவில் அறிமுகமானார். மருதநாட்டு இளவரசி மந்திரகுமாரி போன்ற படங்களின் வாயிலாக தனக்கு ஒரு இடத்தினை பெற்றார் நடிப்பது மட்டுமல்லாமல்

தயாரிப்பாளராகவும் இயக்குனராகவும் உருவெடுத்தார். அவர் இயக்கிய முதல் படம் நாடோடி மன்னன். அதனை தொடர்ந்து உலகம் சுற்றும்; வாலிபன் மற்றும் மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன் என்னும் படத்திலும் இயக்கி நடித்து வெற்றி பெற்றார் ரிக்சாக்காரன் படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் சிறப்பாக நடத்தியமைக்காக தேசிய விருது இவருக்கு வழங்கப்பட்டது

1953இல் திமுகவில் சேர்ந்து 1962ல் சட்டசபை மேலவை உறுப்பினரானார். 1977- ல் தனிக்கட்சி தொடங்கினார். 1977 –ல் முதல் முறையாக தமிழக முதலமைச்சரானார். சி என் அண்ணா துரையின் மறைவுக்கு பின் கருணாநிதியுடன் ஏற்பட்ட முரண்பாடுகளால் அக்கட்சியை விட்டு விலகி அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் என்ற பெயரில் புதிய கட்சியில் தன் பயணத்தைத் தொடர்ந்தார் இவர் இறந்து 29 ஆண்டுகள் மேலாகியுள்ள நிலையிலும் இவருக்காகவே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தக்கு வாக்களிப்பவர்கள் தமிழ்நாட்டில் உள்ளனர்.

**திரைப்படங்களில் பாடல்கள்**

திரைத்துறையில் அறிமுகம் ஆகி அரசியல் புகுந்து தமிழக முதலமைச்சரானார். அவர் அரசியலில் வெற்றி பெற்று ஆட்சி அமைக்க அவரது படங்களும் அதில் இடம்பெற்றிருந்த பாடல்களுமே முக்கிய காரணம் . வாழ்க்கையின் இன்பம் துன்பம் போன்ற அனைத்து உணர்வுகளையும் அவரது பாடல்களில் பார்க்கலாம். கவிஞர் வாலி ஓ. மருதகாசி கவிஞர் கண்ணதாசன் புலமைப்பித்தன் போன்றோரின் வரிகளில் மக்களுக்கு நல்லதை புகுத்த வேண்டும் உணர்த்த வேண்டும் என்பதை பாடல்களில் வரிகளாக கொண்டு வந்தவர். திரைப்படங்களில் எந்த கதாபாத்திரத்தை ஏற்று நடித்தாலும் அவை மக்களிடையே மாற்றங்களையும் நற்பண்புகளையும் வளர்க்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார் அதனால் அதற்கேற்றவாறு பாடல் கருத்துக்களை அமைக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்ததை அறிய முடிகிறது.

**ஏளிய மக்களின் வாழ்க்கை நிலை**

புத்தன் இயேசு காந்தி பிறந்தது பூமியில் எதற்காக
தோழா ஏழை நமக்காக

கங்கை யமுனை காவிரி வைகை ஓடுவது எதற்காக
நாளும் உழைத்து தாகம் எடுத்த தோழர்கள் நமக்காக

என்று ஏழை மக்கள் வாழ்க்கை நிலைகளை எடுத்துரைப்பார். உழைப்பாளிகள் உயர்வடைய பொருளதாரத்தில் மேலோங்கியவர்களும் உதவிட வேண்டும். உணவிற்கு வழியல்லாமல் ஏங்கும் குழந்தைகள் மழைக்கும் தங்க இடமில்லாமல் தவிக்கும் முதியோர்கள் இவர்களின் எதிர்காலம் எவ்வாறு அமையும் என்பதை சுட்டிக்காட்டியிருப்பார்.

**வீரர்களின் கடமை**

தமிழக மக்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து நாட்டை காக்க பாடுபட வேண்டும் எனவும் அவர்களின் வாழ்க்கைக்கு நம்பிக்கை ஊட்டும் விதமாக

அச்சம் என்பது மடமையடா
அஞ்சாமை திராவிடர் உடைமையடா
ஆறிலும் சாவு நூறிலும் சாவு
தாயகம் காப்பது கடைமையடா

என்ற பாடல் வரிகளில் தமிழர்களை உற்சாகப்படுத்தியிருப்பார் இறப்பு எப்போது எங்கு வேண்டுமானாலும் வரலாம்.அதற்காக சுயநலம் இல்லாமல் பொதுநலத்துடன் வாழ வேண்டும்.

என்றும்
ஒரு தாய் மக்கள் நாம் என்போம்
ஒன்றே எங்கள் குலம் என்போம்
தலைவன் ஒருவன் தான் என்போம்

எதிரிகளின் சூழ்ச்சியால் தனித்தனியாக பிரிக்கப்பட்டாலும் நாம் அனைவரும் ஒரு தாய் மக்கள் என்ற எண்ணம் மேலோங்கி இருக்க வேண்டும் ஒற்றுமையை மையப்படுத்திப் பாடியிருப்பார்.

**ஆரசியல் நிலை**

ஆட்சி மாற்றம் நிகழ்ந்;தால் வாழ்க்கை நிலை மாறிவிடும் என ஒவ்வொரு மக்களும் நினைக்கின்றனர்.ஆனால் ஆட்சியாளர்களால் மக்கள் என்றும் ஏமாற்றம் அடைந்து கொண்டுதான் இருக்கின்றனர் என்பதை

எவரது காலையும் பிடிப்பார்
விடுக்கென வாரியும் விடுவார்
இன்னும் எத்தனை எத்தனை காலம்
ஏமத்துவார் இந்த நாட்டிலே

ஏன்ற பாடலினால் தமிழக மக்கள் ஆட்சி மாற்றம் வேண்டும் என போராடும் வகையில் உணர்ச்சி பெருக்குடன் அமையும் வகையில் பாடல் அமைந்திருக்கும்.

**தாய்மையைப் போற்றுதல்**

எந்த ஒரு உயிரும் இம்மண்ணில் பிறப்பது தாயால் மட்டுமே முடியும் என்பதை எடுத்துரைப்பார். பெண்களை அடிமையாக பார்க்கும் ஆண்களிடத்தில் தாய்மையின் தனித்தன்மையை விளக்குவதாக

தாயில்லாமல் நானில்லை
தானே எவரும் பிறந்ததில்லை
எனக்கு ஒரு தாய் இருக்கின்றாள்
என்றும் என்னை காண்கின்றாள்

என்ற வரிகளில் தாய்மையின் பெருமைகளைப் பறைசாற்றி பாடியிருக்கின்றார்.

பெண்மையைப் போற்றுதல்

நிலவு ஒரு பெண்ணாகி
உலவுகின்ற அழகோ
நீரலைகள் இடம் மாறி
நீந்துகின்ற குழலோ
ஆழ்கடலின் சங்காக
நீள் கழுத்து அமைந்தவளோ
யாழிசையின் ஒலியாக

என்ற பாடலில் பெண்மையையும் அவள் அழகையும் போற்றும் விதமாக அமைக்கப்பட்டிருக்கிறது. பெண்ணைப் பொருளாக பார்க்காமல் அன்பையும் மதிப்பையும் அழித்து பொக்கிஷமாக காக்க வேண்டும் என்பதை உணர்த்தியிருப்பார்.

**நல்வழி படுத்தல்**

திருடாதே பாப்பா திருடாதே
வறுமை நிலைக்கு பயந்து விடாதே

திறமை இருக்கு மறந்து விடாதே

என்ற பாடலில் வறுமை நிலையில் சிக்கித் தவிக்கும் சிறுகுழந்கைகளின் நிலையையும் அவர்களை நல்வழியில் செல்வதற்கான வழிமுறைகளையும் எடுத்துக் கூறியிருப்பார்.

கடமையைச் செய்தல்

நான் ஏன் பிறந்தேன்
நாட்டுக்கு நலமென்ன புரிந்தேன்.
என்று நாளும் பொழுதும் வாழும் வரையில்
நினைத்திரு என் தோழா
நினைத்து செயல்படு என் தோழா

என்று தனிநபர் கடமைகளை விவரித்துக் கூறியுள்ளார். நம்முடைய கடமைகளை சரிவர செய்தாலே நாடு சிறப்பாக விளங்கும். அதனை விடுத்து தன்னை சரி செய்ய முடியாத மனிதனால் நாடு எப்படி முன்னேறும் என்று கேட்கும்விதமாக பாடலை அமைத்திருப்பர்.

ஊரார் போற்றுதல்

சின்ன பயலே செய்தி கேளடா
நான் சொல்லப் போற வார்த்தையை எண்ணி பாருடா
நீ எண்ணி பாருடா
ஆளும் வளரனும்
அறிவும் வளரனும்
அதுதாண்டா வளர்ச்சி

என்ற பாடல் வரிகள் மூடநம்பிக்கைகளில் மூழ்கிக் கிடந்த சமுதாயத்தை மாற்றும் விதமாக பாடல்;களை பாடி இருப்பார். தனி மனிதனின் மாற்றம் சமுதாய மாற்றமாகும் என்பதை புலப்படுத்த அறிவு முக்கிய பங்காற்றுகின்றதை உணர்த்தியிருப்பார். எதிர்கால சமுதாயம் இளைஞர்களிடம் உள்ளது என்பதையும்

திருந்தாத உள்ளங்கள் இருந்தென்ன லாபம்
வருந்தாத உருவங்கள் பிறந்ததென்ன லாபம்
இருந்தாலும் மறைந்தாலும் பேர் சொல்ல வேண்டும்
இவர் போல யார் என்று ஊர் சொல்ல வேண்டும்

என்ற பாடலில் மனிதனின் ஆழ்மனத்தை எழுப்பும் விதமாக பாடியிருப்பார் தன்னைத்தானே மாற்றிக் கொள்ளாவிடில் அவனிடம் மாற்றும் உருவாகாது என்று உணர்த்தியிருப்பார். பிறந்தான் இறந்தான் என்று இல்லாமல் ஊர் போற்றக்கூடிய அளவிற்கு பல பேரின் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக விளங்கினான் என்பதே அவன் வாழ்க்கைக்கு சிறந்த அர்த்தமாகும் என்று குறிப்பிட்டு இருப்பார்.

**விவசாயத்தை காத்தல்**

1967 ஆம் ஆண்டு வெளிவந்த விவசாயி திரைப்படத்தில்

என்ன வளம் இல்லை இந்த திருநாட்டில்
ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்
ஒழுங்காய் பாடுபடு வயக்காட்டில்
உயரும் உன் மதிப்பு அயல்நாட்டில்

பாரம்பரிய தொழிலான விவசாயத்தை காக்கும் பாணியில் பாடியிருப்பார் விவசாயம் செய்வதால் தனி நபர் மட்டுமின்றி நாடும் வளரும் என்ற கொள்கையை குறிப்பிட்டும் பிற நாட்டுக்கு வேலைக்குச் சென்று தன்மானத்தை இழந்து சம்பாதிப்பதை விட தன்மானத்துடன் நம் விவசாயத்தை செய்வதை மேன்மையானது என்பதையும் மண்ணை நம்பி காத்தால் அது நமக்கு இரு மடங்காக காத்து செல்வத்தை அளிக்கும் என்ற கருத்தினையும் புலப்படுத்தியுள்ளார்.

**தர்மம் செய்தல்**

தர்மம் தலைகாக்கும் திரைப்படத்தில்
தர்மம் தலைகாக்கும்
தக்க சமயத்தில் உயிர் காக்கும்
கூட இருந்தே குழி பறித்தாலும்
கொடுத்தது காத்து நிற்கும்
மலை போல வரும் சோதனையாவும்
பனிபோல் நீங்கிவிடும்
நம்மை வாழ விடாதவர் வந்து நம் வாசலில்
வணங்கிட வைத்துவிடும்

என்ற வரிகளில் தர்மம் செய்தல் சிறந்த பண்புகளில் ஒன்றாகும் என்பதை உணர்த்தி இருப்பார். ஒவ்வொரு மனிதனும் தர்மம் செய்ய வேண்டும் என்றும் இருக்கின்றவன் இல்லாதவனுக்கு தர்மம் செய்யலாம் என்பதை விளக்கி இருப்பார் ஏனெனில் ஒவ்வொருவரும் செய்த உதவியானது அவர்களின் துன்ப நேரங்களில் அவர்களைக் காக்கும் தன்மையை பெற்றிருக்கும் என்பதை சிறப்பாக உணர்த்தியுள்ளார்

**முடிவுரை**

எம்.ஜி.ஆரின் பாடல்கள் எளிமையானது. படிக்காத பாமர மக்களுக்கும் புரிந்துக் கொள்ளும் வண்ணம் அமைந்தது. இசையால் ஈர்க்கப்பட்டு அனைவராலும் பாடப்பட்டது. நான்கு அல்லது ஐந்து சொற்கள் மட்டுமே திரும்ப திரும்ப வந்து பாடத்தூண்டியது.. மூன்று வயதிலிருந்து எண்பது வயது வரை எம்.ஜி.ஆர் பாடலை ரசித்ததோடு; அவரது கருத்துக்களையும் பலரது வாழ்க்கையும் மாற்றும் விதமாக அமைந்தது

**சான்றெண் விளக்கம்**

1.நான் கண்ட எம்ஜிஆர் - மணியன் இதயம் பப்ளிகேஷன் சென்னை 04 (1985)

2.நான் ஏன் பிறந்தேன் - வேலன் வேல்பாண்டி என்ற பாசுரம் சென்னை -24 (1988)

3.புரட்சித்தலைவர் அரசின் தர்மச்சட்டங்கள் -கா சுப்பு அண்ணா தொழிற்சங்க பேரவை சென்னை - 14 (1984)

4. எம்ஜிஆர் ஒரு சகாப்தம் - நியூஸ் ஆனந்தன் தனலட்சுமி பதிப்பகம் சென்னை -17( 1981)

5. புரட்சித்தலைவரின் பொன்மொழிகள் - சாலி இக்பால் வெளியீடு நூல் பதிப்பகம் சென்னை 01 (1980 )